நியாயமான குறைந்த விலைகளில் வழங்குமாறு இந்தியப் பஞ்சுக் கழகத்தையும் கேட்டுள்ளார். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளால் விற்கப்படும் நூலின் விலைகள் உயர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ளும் வண்ணம் நியாயமான அளவில் அவ்விலைகள் வரையறுக்கப்படுகின்றன. மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல்கள் முழுமையும் இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பயனுக்கென்றே ஒதுக்கிவைக்கப்படுகின்றன.

நீண்ட கால ஏற்பாடாக, நமது மாநிலத்தின் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு வேளாண்மைத்துறை, நெசவாலைத் தொழில் துறை, கைத்தறிகள் துறை, இவற்றின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தின் பருத்தி ஆலைத் தொழில் நலிவினை நீக்குவதற்கு இதுதான் இறுதியானத் தீர்வாக இருக்கமுடியும்.

நீண்ட இழை பருத்தி நூல் விலைகளின் அதிகரிப்பு, செயற்கைப் பட்டுநூல் விலைகள் அதிகரித்ததின் உடன் விளைவாகும். செயற்கைப்பட்டு நூல் விலைகள் இறங்கினால், அந்த அளவுக்கு நீண்ட இழை பருத்தி நூல் விலையும் இறங்கும். செயற்கைப் பட்டு நூல்களை உண்மையில் பயன்படுத்துவோருக்கு அவை நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை கைத்தறிகள், நெசவாலைகள் இயக்குநர் செய்து வருகின்றார். நமது ஆலைகளின் உடனடித் தேவைகளுக்காக 1.5 லட்சம் பேல் நீண்ட இழைப் பருத்தி இறக்குமதி செய்ய இந்திய அரசு இசைந்துள்ளது. மேலும், அதிக அளவு நீண்ட இழை பருத்தி இறக்குமதி செய்யுமாறு இந்திய அரசு வற்புறுத்தப்படுகின்றது.

மாநில அரசு நிலைமையை வெகு உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. இச்சிக்கல் குறித்து இவ்வரசு இந்திய அரசுடன் தொடர்பு கொண்ட வண்ணம் உள்ளது. தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கடப்பதற்குத் தேவையான உடனடி ஏற்பாடுகளைச் செய்யுமாறு வற்புறுத்தியும் வருகின்றது. நிலைமையைச் சீராக்கவும், தமிழ் நாட்டு கைத்தறி விசைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் இவ்வரசு தனது அதிகாரத்திற்குட்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும்.

5. அமைச்சர் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கு முன்னாள் நிதியமைச்சர் அளித்த விடையைச் சரி செய்து வேளாண்மை அமைச்சர் அளித்த அறிக்கை.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir, while furnishing answer to a supplementary question to the Legislative Assembly Question No. 216 (Starred) on 3rd September 1970 it was stated by the previous Minister for Finance, Thiru K. A. Mathialagan that the Government of India were addressed for a

1970 நவம்பர் 30] [Dr. (Thirumathi) Satyavanimuthu]

housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for the repatriates from Burma at Vyasarpadi and that the matter is under the consideration of the Government of India.

I would like to correct the above statement as follows:—

The Government of India were addressed for a housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for housing the repatriates from Burma at Vyasarpadi and that the Government of India have raised a number of queries on the above proposal, and the matter is under examination here.

6. அரசினர் தீர்மானம்.

அவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 23 (1) வது விதியைத் தளர்த்தி தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பாக அரசினர் அலுவல்களை முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

7. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

8. தனியார் அலுவல்.

தீர்மானம்

தமிழ் மொழியையே பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுத்தல் குறித்து.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்